பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1·25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 8 ஜுலைகஜ் 27 இதழ் 222
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-9-84

## யாழ்., பளை ரயில்நிலையங்களில்
# வானொலித் தொலைபேசி கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நேற்றுக்காலை துப்பாக்கிகளுடன் வந்த 10 இளைஞர்களால், புகையிரத நிலையக் கட்டுப்பாட்டு அறையில் பொருத்தப்பட்டிருந்த வானொலித் தொலைபேசி கொள்ளையடிக்கப்பட்டது.

வான் ஒன்றில் வந்தவர்கள் வெளிக்கவுண்டரில், டிக்கட் பதிவுசெய்து கொள்ள வந்த பிரயாணிகளையும், அந்த அறைக்குள் கூட்டிவந்து புகையிரத நிலைய உத்தியோகத்தர்களுடன் சத்தம் போடாமல் நிற்குமாறு பணிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த அறையிலும் பிரதம புகையிரத நிலைய அதிபர் அறையிலும் இருந்த தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாம்.

அறையில் ஒரு மூலைக்குள், அடைக்கப்பட்ட பகுதிக்குள் பொருத்தப்பட்ட, கம்பித் தொடர்பின்றிப் பேசக்கூடிய வானொலித் தொலைபேசிக் கருவியைக் கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

அறையிலிருந்தவர்களிடம் ஒருமணிநேரம் எவரும் வெளியில் செல்லக்கூடாது என்று எச்சரித்துவிட்டுச் சென்றனராம்.

இந்தக் கருவி புகையிரதப் பகுதியினருடன் மட்டும் தொடர்புகொள்ளப் பாவிக்கப்பட்டு வந்ததாகவும், காங்கேசன்துறை, பளை, யாழ்ப்பாணம் புகையிரத நிலையங்

(5-ம் பக்கம் பார்க்க)

## ● மாதகலில் விழும் குண்டுகளின் எதிரொலி
# வீடுகளைவிட்டு மக்கள்
# வெளியேறினர்!
## ஆலயங்களில் தஞ்சம்!!

(நமது பண்டத்தரிப்பு நிருபர்)

**மாதகல் கடற்கரைப்பகுதிகளில் நேற்று முன்தினமிரவு நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் காரணமாக பல நூற்றுக்கணக்கான மக்கள் இரவோடு இரவாக வீடுகளை விட்டு வெளியேறி, பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர் ஏராளமான மக்கள் மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் தஞ்சமடைந்துள்ளனர்.**

நேற்று அங்கு அங்குரார்ப்பணம்செய்யப்பட்ட மாதகல் பிரஜைகள் குழு இதுபற்றித் தகவல் தெரிவிக்கையில்: தங்களுக்குக் கிடைத்திருக்கும் முறைப்பாடுகளின்படி, நேற்று முன்தினமிரவு சுமார் ஏழு மணியளவில் மாதகல் கடற்கரைப்பகுதிகளில் பயங்கரச் சத்தங்களுடன் குண்டுகள் தரையில் விழுந்தன என்றும், மக்கள் பதறித் துடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெறியேறினர் என்றும் ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதே நேரத்தில், குண்டுத் தாக்குதலினால் ஒரு வீட்டிலிருந்த ஆடு பலியானதென்றும் பொதுமக்களினால் கண்டெடுக்கப்பட்ட குண்டுகள் சில மாதகல் பங்குத்தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்

(5ம் பக்கம் பார்க்க)

## விலைமதிப்புள்ள முத்திரைகள் பெறுவதில் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் துப்பாக்கி முனையில் பெறுமதிமிக்க முத்திரைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இச் செயல் முத்திரை பெறுபவர்களுக்கு மிகவும் பாதிப்பை

(5-ம் பக்கம் பார்க்க)

# திருமலையில் 4 பேர் சுட்டுக்கொலை!

(திருகோணமலை)

திருக்கோணமலையிலுள்ள சேருவலை எனுமிடத்தில் நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சேருவலை எனுமிடத்திலுள்ள பூமரத்தடிச்சேனை எனும் கிராமத்தில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது

நேற்று முன்தினம் அதிகாலை நான்கு பேர் இருவீடுகளுக்குச் சென்று டபிள்யூ. செல்வநாயகம் (28 வயது) எஸ். காளிதாசன் (30 வயது) ஆகிய இருவரையும் துப்பாக்கியால் சுட்டனர் என்றும் இருவரும் ஸ்தலத்திலேயே மரணமானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு காணப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில் 'காட்டிக்கொடுப்போருக்கு அளிக்கப்படும் மரணதண்டனை' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதே நேரத்தில் கடந்த 19-ம் திகதியிலிருந்து காணாமற்போன ஆர். சுப்பிரமணியம் (37 வயது). ஏ. குருசாமி (55 வயது) ஆகிய இருவரும் நீர்ப்பாசன வாய்க்கால் ஒன்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

## சாவகச்சேரியில் நேற்றும் குண்டுகள் வெடித்தன!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நேற்றுப் பிற்பகல் இரு குண்டுகள் பயங்கரச் சத்தத்துடன்வெடித்தன.

பொலிஸ் நிலையத்திற்கு சமீபத்திலுள்ள வீட்டுச்சுவர் ஒன்று சரிந்து விழுந்துள்ளதாகவும் அப்பகுதியில் உள்ள வீட்டு வேலிகள் நேற்றுத் தீக்கிரையாகியுள்ளதாகவும் பல மா, பலாமரங்கள் எல்லாம் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

பொலிஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள வீடுகளில் கிடுகுவேலிகள் எல்லாம் அகற்றப்பட்டுள்ளன.

சாவகச்சேரியில் தொடர்ந்து பதற்றநிலை காணப்படுகிறது கடைகள் நேற்றும் திறக்கப்படவில்லை. போக்குவரத்தும் குறைவாகக் காணப்பட்டது. (க)

## சிவா, அமிர் இன்று திரும்புகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும் இன்று யாழ்ப்பாணம் திரும்புகிறார்கள்.

## யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் 'வித்தி'யின் கார் கடத்தப்பட்டது

(மாவிட்டபுரம்)

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கார் நேற்று முன்தினம் மாலை தெல்லிப்பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது துப்பாக்கி முனையில் இனம்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டது.

பேராசிரியர் வித்தியானந்தனை அவரது தெல்லிப்பளை இல்லத்தில் விட்டுவிட்டு, வீட்டிலிருந்து 50 யார் தூரத்தில் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருக்கையிலேயே இக்கார் கடத்தப்பட்டது.

(5ம் பக்கம் பார்க்க)

## 15 இளைஞர்கள் நாளை திரும்புவர்

(யாழ்ப்பாணம்)

காலி தடுப்பு முகாமிலுள்ள 81 இளைஞர்களில் நாளை நண்பகல் 15 பேர் யாழ்ப்பாணம் வருகின்றார்கள்.

முகாமிலுள்ள பிள்ளைகளைப் பெற்றுத் தருமாறு வடமராட்சித் தாய்மார்கள் யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்திடம் நேரில் கோரியதைத் தொடர்ந்து அவர் காலி முகாம் அதிகாரியைத் தொடர்புகொண்டார். அப்போது 15 பேர் செவ்வாய்க்கிழமை விடுதலைசெய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## "இஸ்ரேல் இலங்கைக்கு உதவ முன்வந்ததற்குக்காரணம்
# பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் தமிழ்த் தீவிரவாதிகள் தொடர்பே"
### லண்டன் சஞ்சிகை தகவல்

(லண்டன்)

''பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் தொடர்பு கொண்டிருப்பதை அறிந்த பின்னரே இலங்கை அரசாங்கத்திற்கு உதவியளிக்க இஸ்ரேல் முன்வந்தது''.

இத்தகவலை பிரிட்டனிலிருந்து வெளியாகும் 'எக்கானமிஸ்ட்' என்ற ஆங்கில வாரசஞ்சிகை அதன் கடந்த சனிக்கிழமைப் பதிப்பில் வெளியிட்டுள்ளது

சஞ்சிகையில் மேலும் தெரிவிக்ப்பட்டிருப்பதாவது:-

''தனது சொந்தப் பாதுகாப்புச் சம்பந்தப்பட்டால் தவிர வேறு அரசாங்கங்களுக்கு இராணுவ உதவிஅளிப்பதில்லை என்ற ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் இஸ்ரேல் செய்து கொண்டுள்ளது.

''ஆனால் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் தொடர்பிருப்பதனையும், அவ்வியக்கத்தினால் தமிழ்த் தீவிரவாதிகள் பலருக்குப் பயிற்சியளிக்கப்பட்டதையும் அறிந்த பின்னரே இஸ்ரேலிய அரசாங்

(5ம் பக்கம் பார்க்க)

## சிறைமீட்பு சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சிறைமீட்பு முதலாவது நினைவு தினம் தொடர்பாக 2 வெவ்வேறு சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்தில் ஒட்டப்பட்டுள்ளன.

சிறைச்சாலையிலிருந்து வெளியேறும் காட்சியைக் கொண்ட சுவரொட்டியில் ''போராளிகளை தற்கொலை செய்ய உங்களுக்கு உரிமை இல்லை. நீங்கள மக்களின் சொத்து. மக்கள் உங்களை மீட்பார்கள். மக்களுக்காக உழைக்க நீங்கள் வருவீர்கள்'' என்று எழுதப்

[5ம் பக்கம் பார்க்க]

## தனியார் வாகனத்தடை

(கொழும்புத்துறை)

யாழ். செயலக வளவிற்குள் தனியார் வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்துக்குச் சொந்தமான வாகனங்களும் உத்தியோகத்தர்களின் வாகனங்களுமே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

# பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது!

(மதுரை)

மதுரையிலுள்ள நாகமலை பொலிஸ் நிலையம் இனம் தெரியாத கும்பல் ஒன்றினால் நேற்று முன்தினம் தாக்கப்பட்டது

இத்தாக்குதலில் ஒரு பொலிஸ் சுப்பிரின்டன் உட்பட 11பேர் காயமடைந்துள்ளனர்.

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நாகமலையில் உள்ள ஒருவரை விசாரணைக்கு அழைத்துச் சென்றமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே இப்பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதாம்.

# விளம்பரம்

## விற்பனைக்கு

கடைச்சல் இயந்திரங்கள் (Lathe) விற்பனைக்குண்டு. தொடர்பு:- விஸ்வரத்தினம், புதிய இல 375, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1882

I. C. M. A. P. II M. I. S. D. P. Terminology ஒரு பிரதி விலை 15/-. ராதா கிருஷ்ணாஸ், பொலிரெக்னிக், 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார் கோவிலடி. 1885

Cross Broilers ஒருநாள் 4/50, ஒரு கிழமைக் குஞ்சு6/-, சேவல்குஞ்சு 1/90, Broilers 9/25. ரா தா கிரு ஷ் ணா ஸ், 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார் கோவிலடி. 1884

நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு. தொடர்புகொள்ள வும். ச. நல்லநாதன், 11/1, ஓடைலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1891

H 100 S Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. றவிச்சந்திரன், 308, பருத்தித் துறை வீதி, நல்லூர், யாழ்ப் பாணம். 1840

ஊரெழு கிழக்கு ஆர்.வீ.ஜி. பாமிற்கு வடக்குப் பக்கமாக 10 (பத்து) பரப்பு தோட்டக் காணி கிணற்றில் அரைவாசிப் பங்குடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் வந்து சந்திக்கவும். சின்னட்டி பசுபதி ஊரெழு கிழக்கு, பாலசிங்கம் கடை ஒழுங்கை. 1894

மகாஜனக் கல்லூரிக்கு பின் ஒழுங்கை உள்ள 8½ பரப்புக் காணி (பனைகளுடன்) விற் பனைக்குண்டு முழுமையாக வும் பகுதியாகவும் கொடுக் கப்படும் தொடர்பு விளம்பர இல: 1920 C/o ஈழநாடு. 1920

துன்னாலை வடக்கு தாமரைக் குளத்திற்கு அண்மையில் நான்கு பரப்பு காணி வீட்டு டன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வை. சிவகுரு நாதன் ''சிவ வாசா'' 3-ம் கட்டை நல்லூர். 1921

## குத்தகைக்கு

ஆனைக்கோட்டைச் சந்தியில் 40 பரப்பு தென்னந் தோட் டக்காணி 5 வருட அல்லது 10 வருடக் குத்தகைக்குண்டு. விய பாரிகளுக்கும், களஞ்சிய சேமிப்புக்கும், பண்ணைக்கும் உகந்தது. தொடர்பு: விளம் பர இல: 1915, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1915

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை (இல 290741351 X) பஸ்தியன் சிலுவை முத்தையா கோமஸ், தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற் டி பெயரில் 26/7 அடப்பன் ரோட், யாழ்ப்பாணத்தில் ஒப் படைக்கவும். 1899

## வாடகைக்கு

மாணவிகள் தங்குவதற்கு எல்லா வசதிகளும் நிறைந்த அறைகள் வாடகைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்க. 17/1 ரெயில்வேவியூ கண்டிக் குளி, யாழ்ப்பாணம். [கச்சேரி பஸ்நிலைய அருகாமை] 1859

## தேவை

கொங்கிறீட் சட்டறிங் (Shuttering)க்குப் பாவிக்கும் பார் தடி, முட்டுமரம், அள்ளுப் பலகைகள் உடனடி விலைக்குத் தேவை. பிணிதீர்மனே, சந் தைச் சதுக்கம், சங்கானை. 1888

சாவகச்சேரியில் ஓர் ஸ்தாப னத்தில் காசாளராகவும், கணக்காளராகவும் கடமை புரிய ஆள் தேவை. ஆங்கில அறிவு உள்ளவராகவும்பிணைப் பணம் கட்டக் கூடியவராகவும் இருத்தல்வேண்டும். அரசாங்க ஓய்வு பெற்றவர் 45 வயதுக் குட்பட்டவர் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 1904, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1904

## கல்வி

E. C/ C. E. I, CITY and GUILDS - 85, சர்வதேச அங்கீகாரத்துக்குரிய வெல் டிங், வயரிங், மோட்டர் மெக் கானிசம் புதியபிரிவுகள் ஆரம் பமாகின்றன First In Laws பதிவு செய்யும் கடைசித்திகதி 25 - 09 - 84. J. E. C. 33, பருத்தித்துறைவீதி, யாழ்ப் பாணம். 1914

## வகுப்புக்கள்

Electrical Technicians, 2and 3 T1, T2, T3 (CEI) ECE, Short Hand Typewriting (London) B. A., GAQ (இலங்கை) இடம்:JASE கல்வி நிலையம், 404/2, ஆஸ்பத் திரி வீதி, யாழ்ப்பாணம். (டில்கா மேல் மாடி), நாகம்மா பில்டிங், பஸ் நிலையம் முன் பாக. 1853

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச் சாக்கு விற்பனை

10,000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரஅடிப்படையில் விற்பனைக்கு உண்டு. விபரங்க ளுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முடிவு திகதி 1-10-84.

பொ. சோமாஸ்கந்தர்
பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
தொலைபேசி-யா/23646
(1911)

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
90×20 நடமாடும்
தகரக்கொட்டகை
அமைத்தலுக்கான

### கேள்வி விண்ணப்பம் கோரல்

மேற்படி விண்ணப்பங்களைச் சங்கத்தில் ரூபா 5/-செலுத்திப் பெற்று, விண்ணப்பங்களைத் தலைவர், நல்லூர் ப. நோ.கூ. சங்கம். திருநெல்வேலி என்ற முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் 8-10-84ம் திகதிக்கு முன்போ அல்லது அன்றோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொ.சோமாஸ்கந்தர்
பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ.சங்கம்,
திருநெல்வேலி.
தொலைபேசி-யா/23646
(1910)

## விதைநெல்

(பச்சிலைப்பள்ளி)

பளைப்பகுதி விவசாயிகளுக் குப் பெரும்போக நெற்செய் கைக்குத் தேவையான விதை நெல் பளை கமநலசேவை நிலை யத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இங்கு 'எச்4' இனத் தைச் சேர்ந்த விதைநெல் ஒரு புசல் 95 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

## ஒற்றிக்கு

யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத் தெருவில் சகல வசதியுடன் ஒரு வீடு ஒற்றிக்கு கொடுக்கப் படும். விபரங்களுக்கு:

லலிதா ஜுவல்லறி
213, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
1922

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பா ணம் கந்தர்மடம் இல: 117/2 அரசடி ரோட்டு. ஐயாத்துரை சின்னத்தம்பி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

No: T/ 3809.

ஐயாத்துரை சின்னத் தம்பி கைம்பெண் ஞான ரத்தினம்மாள் சின்னத் தம்பி, இல. 117/2 அர சடி ரோட்டு, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற் கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத் தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவ ரும் 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 31-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன் றத்தில் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்கு கார ணங் காட்டுமாறு இத்தால் தேவைப் படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைபடி,

கு. குலசிங்கம்
பதிவாளர்.

தேதி; 9 - 07 - 84

வரைவு,
ஆர். சிவசுப்பிரமணியம்
மனுதாரின் பதிவு பெற்ற சட்டத்தரணி.

31 - 8 - 84

காரணம் காட்டும் திகதி 26 - 10 - 84 வரை நீடிக்கப் பட்டுள்ளது.

1793

## யாழ். மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

யாழ். குடாநாட்டிலேயே மிகச்சிறந்த முறையில் குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டி ஆகியவை உத்தர வாதத்துடன் மிகச்சிறந்த முறையில் பழுது பார்ப்ப தற்கும், மேற்படி பழுதுபார்த்தலுக்குவேண்டிய உதிரிப் பாகங்களை வேண்டியஅளவு பெற்றுக்கொள்வதற்கும் நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

### லீலா என்ஜினியரிங் வேக்ஸ்,

147, கே. கே. எஸ். வீதி, மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை. தொலைபேசி மாவிட்டபுரம்-3

தலைமை அலுவலகம்:
லீலா என்ஜினியரிங் வேக்ஸ்
இல: 400, கே. சிரில் சி. பெரேரா மாவத்தை,
கொழும்பு: 13. தொலைபேசி; 25933

1906

காங்கேசன் சீமெந்துத்
தொழிற்சாலையிலுள்ள போசனசாலைக்கு

### மீன் விநியோகித்தல்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள போசனசாலைக்கு மீன் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திர விண்ணப்பங்களை 1984-09-30ம் திகதி பி. ப. 4-00மணிவரை தொழிற்சாலை விநியோக உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்வதோடு இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
1984-09-21. 1889

விஸ்வமடுக்குளம் வாலிப விவசாயத் திட்ட
கூட்டுறவுச் சங்கம்

### லிகிதர் பதவிக்கு வெற்றிடம்

மேற்படி எமது சங்கத்தின் லிகிதர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவற்றையும்
''தலைவர்,
வாலிப விவசாயத் திட்ட கூட்டுறவுச் சங்கம்,
விஸ்வமடுக்குளம்
என்ற முகவரியிட்டு
எதிர்வரும் 05 10-84-ந் திகதி

அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பும் வண்ணம் கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

**தகைமைகள்:**

கல்வித்தகைமை: க. பொ. த. சாதாரண தரத் தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணி தம்/வர்த்தக கணிதம்/தூயகணிதம் தமிழ்பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங் களில் சித்தி.

சம்பளம்: $\frac{195 — 345}{10 \times 10 — 12.5 \times 04}$

வயதெல்லை; 23 — 40

பொதுமுகாமையாளர்.

(1850)

வலி கிழக்கு வடபகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி

பகிரங்க அறிவித்தல்

### கழிவுப்பொருட்கள் ஏலவிற்பனை

மேற்படி சங்கத்தில் உள்ள கழிவுப்பொருள்கள் பகிரங்க ஏலத்தில் 06-10-84ந் திகதி சனிக்கிழமை மு. ப. 10 மணி தொடக்கம் ஆவரங்கால் தெற்கு கிளை இல. 10/2ல் விற்பனை செய்யப்படும். பொருட்களை பார்வையிடுவோர் 04-10-84ம், 05-10-84ந் திகதி களில் மேற்படி கிளையில் 9-30—4-00 மணி வரையும் பார்வையிடலாம்

| | | | | |
|---|---|---|---|---|
| அரிசி | கிருமி நாசினி | காகிதாதிகள் | அலங்காரப் பொருட்கள் | சைக்கிள் உதிரிப்பாகங்கள் |
| மாவு | | உபகரணங்கள் | | பாவிக்கப்பட்ட லொறி டயர்கள்-900-20(6) 8.25-20(4) |
| | உரப்பசளை | | வாளிகள் | |
| பருப்பு | சோப்பு வகை | களிநூல் வகைகள் | பாடப் புத்தகங்கள் | வெற்றுப்பரல்கள் 210 லீற்றர் (50) |
| மற்றும் நுகர்ச்சிப் பொருட்கள் | | | | மற்றும் பிரதான பொருட்கள் |

இங்ஙனம்
பொதுமுகாமையாளர்
(1898)

# "கிழக்கு பெய்ரூட் குண்டு வெடிப்புக்கு அமெரிக்காவின் மேற்காசிய கொள்கையே காரணம்!

## சிரிய அரசாங்கம் அறிவிப்பு

### லெபனுன் நோக்கி 3 அமெரிக்க யுத்தக் கப்பல்கள்

டமாஸ்கஸ், செப். 23

**கிழக்கு பெய்ரூட்டில் கடந்த வியாழக்கிழமை நிகழ்ந்த பயங்கரகுண்டு வெடிப்பு உட்பட லெபனுனில் இடம்பெற்று வரும் குழப்பங்களுக்கு அமெரிக்காவின் மேற்காசியக் கொள்கையே காரணம் என்று சிரிய அரசாங்கம் நேற்றுக் குற்றஞ்சாட்டியது.**

அமெரிக்கா அதன் பெய்ரூட் தூதரகம் குண்டுவெடிப்பினுல் தாக்கப்பட்டது தொடர்பாக பழிவாங்கும் நடவடிக்கைகள் எதிலும் இறங்கினுல் மேற்காசியப் பிரச்னை மேலும் சிக்கலடைவதுடன், அமெரிக்காவுக்கு மேலும் நெருக்கடிநிலை தோன்றும் எனவும் சிரியா எச்சரித்துள்ளது.

இதேவேளை பிரதி அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரிச்சார்ட் மேர்வி நேற்று கிழக்கு பெய்ரூட்டில் குண்டுவெடிப்பினுல் சேதமடைந்த அமெரிக்கத் தூதரகக் கட்டிடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். இக்குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

திரு- ரிச்சாட் மேர்வி இக்குண்டு வெடிப்புக் குறித்து கருத்து வெளியிடுகையில், பயங்கரவாதிகளின் நோக்கம் அமெரிக்கக் கட்டிடம் முழுவதையும் தரைமட்டமாக்குவதாகும். ஆனுல் அந்நோக்கம் நிறைவேறவில்லை.

''இத்தகைய பயமுறுத்தல்களால் அமெரிக்காவின் மேற்காசிய நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

(7ம் பக்கம் பார்க்க)

# 3 வது உலகப்போர் ஏற்படாதவாறு....

சென்னை, செப் 23

மூன்ருவது உலகப் போர் மூளாதவகையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இலங்கை விவகாரத்தை அணுகிவருகின்ருர். என்று ராஜ்யசபை உறுப்பினரான நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன் கூறினுர்.

செங்கல்பட்டில் நடந்த பொது வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு சிவாஜிகணேசன் மேலும் கூறியதாவது: ''இலங்கைப் பிரச்னையை மிகவும் அவதானமாக அணுக வேண்டும். உலக வல்லரசுகள் அதில் சம்பந்தப்பட்டுள்ளன. எனவே இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி மூன்ருவது உலகப்போர் ஒன்று தோன்ருத வகையிலேயே பக்குவமாகக் கையாண்டுவருகிருர்" என்ருர். (கி)

# ஆர்ஜன்டீன இராணுவ ஆட்சி அட்டூழியங்கள்!

## ஜனுதிபதி அல்போன்ஸேயிடம் ஆணைக்குழு அறிக்கை!

புவனர்ஸ்அயர்ஸ், செப். 23

ஆர்ஜன்டீனுவில் இராணுவ ஆட்சியின்போது இடம்பெற்ற மனித உரிமைமீறல் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு தனது அறிக்கையை ஆர்ஜன்டீன ஜனுதிபதி அல்போன்ஸேயிடம் கையளித்தது.

1976 ஆம் ஆண்டு முதல் 1978ம் ஆம் ஆண்டுவரை ஏழு ஆண்டுகள் ஆர்ஜன்டீனுவில் இராணுவ ஆட்சி இடம் பெற்றது. இவ்வாட்சியின்போது அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் உட்பட அப்பாவி இளைஞர்கள், சிறுவர்கள் பலர் சித்திரவதைக் குள்ளாக்கப் பட்டுக் கொல்லப்பட்டனர்

'ஆர்ஜன்டீனு அரசின்கணிப்பீடொன்றின்படி சுமார் பத்தாயிரம் பேர்வரை இராணுவ ஆட்சியின்போது படுமோசமானவகையில் சித்திரவதைக்குள்ளானுர்களென்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஆர்ஜன்டீனுவில் மக்களாட்சி ஏற்பட்டது. திரு. அல்போன்ஸே ஜனுதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் தமது முதல் கடமையாக இராணுவ ஆட்சி வன்முறைகள் குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்றை நியமித்தார். இவ்வாணைக்குழுவின் அறிக்கையே திரு. அல்போன்ஸேயிடம் புவனர்ஸ்ஸில் நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்மாகக் கையளிக்கப்பட்டது.

இக்கையளிப்பின்போது ஜனுதிபதி மாளிகைக்கு வெளியே மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு நின்றனர். குற்றவாளிகளாகக் காணப்படும் முன்னுள் இராணுவத்தினர் அனைவரும் தண்டிக்கப்ப

(7ம் பக்கம் பார்க்க)

# "குத்துச் சண்டையைத் தடைசெய்ய வேண்டாம்!"

## நோய்வாய்ப்பட்டுள்ள முகமது அலி வேண்டுகோள்

### 15 லட்சம் தடவை தலையில் குத்தப்பட்டாராம்

நியூயோர்க், செப். 23

''குத்துச்சண்டையை விளையாட்டுப் பந்தயங்களிலிருந்தும் தடைசெய்ய வேண்டாம்'' என்று முன்னுள் உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரர் முகமது அலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மர்மமான நரம்பு வியாதி ஒன்றினுல் பாதிக்கப்பட்டுள்ள திரு. அலி கொலம்பியா மாநிலத்திலுள்ள 'பிரெஸ்பைரெறியன்' வைத்தியசாலையில் இருந்தே மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

42 வயதான முகமது அலி கடந்த செவ்வாய்க்கிழமை நரம்புத்தளர்ச்சி காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் மார்ட்டின் ஈக்கர் என்ற நரப்புச் சிகிச்சை நிபுணர் இவரை கவனித்துவருகின்ருர்.

முகமதுஅலி குத்துச் சண்டைப் போட்டியை உலக விளையாட்டுக்களிலிருந்து தடைசெய்யவேண்டாம் என்று குறிப்பிட்டதுடன், ''மனிதர்களைப் பாதிக்கும் ஒரு விளையாட்டு என்று குத்துச்சண்டையைத் தடைசெய்வதாஞல் அதுபோன்ற அதிகளவு விளையாட்டுக்களை மக்கள் நலன் கருதித் தடைசெய்ய வேண்டிவரும்' என்று குறிப்பிட்டார்.

தமது 25 வருட கால குத்துச்சண்டை விளையாட்டில் சுமார் 15 லட்சம் தடவை தமது தலையிலும், உடம்பிலும் குத்தப்பட்டிருக்கலாம் என்றும், முகமது அலி கூறினுர்.

பலதடவைகள் இவரது தலைப்பகுதி குத்தப்பட்டதே தற்போது இவருக்குத் தோன்றியுள்ள நரம்பு நோய்க்குக் காரணம் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

### பிந்திய செய்தி

வீரர் முகமது அலி நேற்று முன்தினம் ஓரளவு சுகம் அடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார். (கி)

பயங்கர வியாதிகளால்

# அமெரிக்க இராணுவக் குடும்பங்கள் பாதிப்பு!

## லண்டன் பத்திரிகை தகவல்

லண்டன், செப் 23

அவுஸ்திரேலியா, தென்பசுபிக் பகுதிகளில் உள்ள அமெரிக்க இராணுவ ஊழியர்களின் பிள்ளைகள் பயங்கர வியாதிகளுக்கு உட்பட்டுள்ளனர்.

'சண்டே பீப்பிள்' என்ற பிரிட்டன் பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல்ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அணு குண்டுப் பரிசோதனைகளால் தோன்றும் கதிரியக்கங்களினுலேயே இப்பாதிப்புக்கள் தோன்றியுள்ளதாக அப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

தென்பசுபிக், அவுஸ்திரேலியக் கரையோரப் பகுதிகளில் உள்ள அமெரிக்க இராணுவ ஊழியர்களின் குடும்பங்கள் அடிக்கடி இப் பகுதிகளில் அணு குண்டுப் பரிசோதனைகளுக்கு முகம் கொடுப்பதாலேயே அங்கவீனர்களாகவும், புற்றுநோய் உட்பட பல மர்ம வியாதிக

(7-ம் பக்கம் பார்க்க)

# சீன இந்திய ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்கள் திருப்தி!

பீக்கிங், செப் 23

சீஞ இந்தியாவுக்கிடையே இடம்பெற்ற ஐந்தாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நேற்று பீக்கிங்கில் முடிவடைந்தன.

இப் பேச்சுக்களில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக இரு தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

இரு நாடுகளிடையேயும் இருந்து வந்த பலகருத்துவேற்றுமைகள் குறைந்துள்ளனவென்றும் பல அரசியல் விடங்களில் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)


யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 11 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுகது அனமையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸதிரேலியா கட்டிடம்
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ் - 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066



★ அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!



AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

### மணிவாக்கு

விஞ்ஞானத்தை அழிவுச் செயல்களுக்குப் பயன்படுத்தக் கூடாது; அறிவியலை மனிதகுலத்தின முன்னேற்றத்திற்காகப் பயன் படுத்த வேண்டும். உலகம் முழுவதற்கும் ஒரே அரசாங்கம் இருக்க வேண்டும்.

— அல்பர்ட்ஐன்ஸ்டீன்

# நமது நோக்கு

## நாட்டின் பாதுகாப்பு

பகையின்றி வாழ்வதே மக்கள் சமுதாயத்தில் உயர்ந்த லட்சியமாகும். அதுவே அச்சமின்றி மக்கள் இன்பமாக வாழ்வதற்கு துணையாகும். பகைவனையும் தன்வசப்படுத்தும் பண்புடையாளன் சொல்லின்படி நடந்தால் தான் உலகம் அமைதியாக வாழ முடியும் என்பது தமிழ் மறையின் கருத்து.

எங்கள் நாட்டின் இன்றைய நிலைமைக்குப் பொருத்தமான இன்னொரு கருத்தையும் தமிழ் முனிவர் மிக அழகாகக் குளிகை போல் உருட்டியிருக்கிறார்.

''இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து''

இலங்கையின் பாதுகாப்புக்கு வருகிற வருட வரவு செலவுத்திட்டத்தில் முந்நூறு கோடி ரூபா ஒதுக்கப் படவிருக்கிறது. இதனை நிதிஅமைச்சர் ரொனி டிமெல் முன்கூட்டியே அறிவித்திருக்கிறார்.

ஏழுவாரங்களில் வெளியாக விருக்கும் பட்ஜெட்டில் உத்தேசச் செலவு சுமார் 6000 கோடி ரூபாவென்றும் வரவு 3000 கோடியென்றும் எனவே துண்டு விழும் தொகை 3000 கோடியென்பது நிதி அமைச்சரின் திட்டமாக விருக்கிறது.

இடைவெளியை நிரப்புவதில் அமைச்சருக்கு அதிக சிரமம் இருக்குமென நினைப்பதற்கு இடமில்லை; வழக்கம் போல் வெளிநாட்டு நிதிஉதவி, கடன் உதவி உள்நாட்டுக்கடன், மற்றும் வரிகள் சொன்னது கேட்குமென்பது அமைச்சரின் துணிவாகலாம். ஆண்டாண்டு தோறும் நடக்கும் பயிற்சி.

இதற்கு முட்டுக்கட்டையாக விருக்கக்கூடியது இன்றும் அரசு சொல்லிக் கொண்டுவரும் 'உள்நாட்டுப் பிரச்னை'' — தமிழர் பிரச்னை.

அரசுக்கு இன்றொரு பிரபல மூதறிஞர் பலமளிக்கிறார். தள்ளாத வயதிலும் மிகத்தைரியமாக ''இலங்கைத் தமிழர் பிரச்னை அதன் உள்நாட்டு அலுவல்; இந்தியா எவ்வகையிலும் தலையிடக்கூடாது'' என்று மொழிந்திருக்கிறார் முன்னாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய்; அதுவும் தமிழ் நாட்டில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் இவ்வாறு கருதுபவர்கள் இவரைத் தவிர வேறெவரும் இல்லையெனலாம்; துணிவாக இத்தகைய கருத்தை ஆதரிக்காத சமூகத்தில் திரு. தேசாய் கூறுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம்; எதிர் நீச்சல் போடுவதில் இன்று இந்தியாவில் அவருக்கு நிகர் அவரென்றால், பாம்புக்கடிக்கு முதல் உதவியாகப் பருகும் மருந்து அன்னாரின் தினசரி பானமென்பது அவருடைய உடல், மன வலிமையின் ரகசியமாகும்.

இன்று இந்த ஒரு தனி மனிதனின் கருத்தை, தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவன் கையில் அகப்பட்ட துரும்பைப்போல் எங்கள் கொழும்புத் தினசரிகள் சில தலையங்கமாகத் தீட்டுகின்றன.

இந்த நாடே இன்று அல்லோல கல்லோலப்பட்டு நாகரிக உலகின் அவமதிப்பைத் தாங்கொணாத கட்டத்தில் பொதுஜன அபிப்பிராயத்தாலும் இந்தியாவின் நட்பு நெருக்குதலாலும் இதனைத் தீர்த்துவைக்கப் பாடுபடுகிறது.

இந்தப் பிரச்னை குறித்து, இந்திய அரசின் போக்கு பற்றி இங்கு மட்டுமல்ல இந்தியாவிலுமே தெளிவற்ற கருத்து நிலவுகிறது.

இது உங்கள் பிரச்னை; நாங்கள் தலையிடமாட்டோம். இதனைத் தீர்க்காது தமிழர்கள் கொலை தொடருமாயின் சும்மா கைகட்டிக் கொண்டிருக்கமாட்டோம் என்பது இந்தியப் பிரதமரின் தெளிவான பேச்சு.

தெளிவான பேச்சென்றாலும் அதில் சந்தேகமிருப்பது கேட்போரின் மனோபாவத்தைப் பொறுத்தது. மனித உரிமை மீறப்படுவது என்றால் இங்கு வாழும் தமிழர் உயிருக்கு உலைவைக்கிறதென்ற கருத்து உரம்பெற்றிருக்கிறது.

இந்தச் சின்னஞ்சிறிய, வறய நாட்டில் கடனில் ஓடும் அரசு பாதுகாப்புக்கு 300 கோடி ரூபா தேவைப்படுவதானால்,முனிவர்கூறும் முட்செடி முற்றி வைரம் ஏறிவிட்டதாக எண்ண வருகிறது.

இதில் நாம் பெரும் பொறுப்புடன் அவதானிக்கும் சிக்கல் ஒன்று உண்டு.

இலங்கை அரசு பயங்கரவாதம் என்று பாடம் பண்ணிவரும் இயக்கத்தின் அடித்தளம் இந்தியாவென்பது இன்று பகிரங்க ரகசியம்.

அன்று தொட்டு இன்று வரைக்கும் இலங்கையின் போர்க்கொடி இவ்விடயத்தில் இந்தியாவிடம் என்ன சலுகை பெற்றிருக்கிறது?

இன்றுவது எங்கள் நாட்டின் நலன் கருதி இந்திய அரசின் கருத்தொன்றை நாம் புரிந்தேயாக வேண்டும்.

தமிழர் 'பயங்கரவாதம்' பயங்கரவாதமல்ல; அதுஒரு வித விடுதலைப்போர் என்ற கருத்து இந்திய அரசின் நடவடிக்கைகளில் புலனாகிறது.

இந்த முரண்பாடே இன்று இலங்கைக்குத் தர்ம சங்கடமாகிறது

இன்று யாழ்ப்பாணத்தில் நிலவும் பயங்கரக் குழப்பம், ஒரு யுத்தமாக விருத்தியடையவேண்டுமா? அதனைத் தடுப்பதற்கு இந்தியா என்றும் உதவத் தயாராகும்.

இந்து சமுத்திரத்தில் எவ்வித போரையும் விரும்பாத இந்தியாவைப் பகையாகக் கொண்டால் தமிழர் பிரச்னையில் சமாதானத் தீர்வை எதிர்பார்க்கலாகாது.

புல்லறிவாண்மை நீங்கியவிடத்து, பகைவரை இனங்காணும் அரசியல் ஞானம் உதயமாகும்.

---

### கோப்பாய் திறந்த வெளிச்சிறை:

## கைதிகள் குறைவாக இருப்பதால் அபிவிருத்தி வேலைபாதிப்பு

(வண்ணார்பண்ணை)

கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலையில் கைதிகள் மிக குறைவாக இருப்பதால் இச் சிறைச்சாலையில் மேற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்படுவதாக இச்சிறைச்சாலைக்கு விஜயம் செய்த உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இச்சிறைச் சாலையின் நலன்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் இக்கருத்து வெளியிடப்பட்டது.

''கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலையில் நடத்தப்படும் பேக்கரியிலிருந்தே யாழ். சிறைச்சாலைக்கு தேவையான பாண் தயார் செய்யப்படுகிறது. இதேபோல கோப்பாய் சிறைச்சாலைக்கென இங்குள்ள தோட்டங்களிலிருந்தே யாழ் சிறைச்சாலைக்கு மரக்கறி வகைகள், இறைச்சி வகைகள் கொண்டு செல்லப்படுகின்றன. ஆனல் இச்சிறைச்சாலை வேலைதலத்திற்கென பல ஏக்கர் கணக்கான காணிகள் இருந்தும் அவை பயன்படுத்தப் படாது கிடக்கின்றன. விவசாயம் செய்யப்பட்ட நிலம் இச் செய்கைக்குரிய கைதிகள் இல்லாததால் பயன்படாது தரிசாகும் நிலை உருவாகின்றது. இச்சிறைச்சாலையின் வருமானத்தையும், முன்னேற்றத்தையும் கருதி திறந்த வெளிச் சிறைச்சாலைக்குரிய கைதிகள் கோப்பாய்ச் சிறைச்சாலைக்கு அதிகமாக அனுப்பப்படல் வேண்டும் என்று' புதிய உறுப்பினர்களைக் கொண்ட உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளர் குழு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

இங்கு விஜயம் செய்த இக் குழுவினர் இச் சிறைச்சாலையில் உள்ள வேலைத் தலங்களை பார்வையிட்டதுடன் கைதிகளுடனும் உரையாடி அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகள் பற்றியும் அறிந்தனர்.

யாழ்ப்பாணம் பிரதம சிறைச்சாலை அத்தியட்சகர் திரு எஸ்,சத்தியமூர்த்தி இப் புதிய உறுப்பினர்களை வரவேற்று இச் சிறைச்சாலை அபிவிருத்தி தொடர்பான இந்த ஆலோசனையை நடத்தினர்.

---

## ''உலக தரிசன இயக்கத்தின் மக்கள் சேவை''

(சாவகச்சேரி)

,,இலங்கையில் இருக்கக் கூடிய 24,000 கிராமங்களில் உலக தரிசன ஸ்தாபனம் சுமார் 800 கிராமங்களில் அதன் பணிகளை ஆற்றிவருகிறது. அவற்றுள் கெற்பேலிக் கிராமமும ஒன்றாகும் இக் கிராமத்தின் முன்னேற்றம் கருதி இப்பகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஆகியோரின் சிபார்சின் பேரில் நாம் இங்கு 28,000 ரூபாய் பெறுமதியான உதவிகளை அளித்துள்ளோம்,,

இவ்வாறு கெற்பேலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் உலக தரிசன ஸ்தாபன அதிகாரியான திரு. ஜே.எஸ். பற்றிக் உரையாற்றும் போது தெரிவித்தார்.

கிராம அபிவிருதிச் சங்கத்தின் தலைவர் திரு.எஸ். குமார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. பற்றிக் தொடர்ந்து பேசுகையில் ''இக் கிராமத்துக்கென எம்மால் வழங்கப்பட்ட நிதி உதவியினை இச் சங்கம் உரிய முறையில் பயன்படுத்தாமல் இருப்பது மிகவும் வேதனை தருவதாகவுள்ளது. இங்கே இருக்கின்ற வறிய குடும்பஸ்தர்களுக்கு ஆடு, கோழி, மாடு, என்பனவற்றினைத் தந்தோம் ஆனல் இச் சுழற்சித் திட்டம் சரியான முறையில் அமையவில்லை இத் திட்டத்தின் மூலம் எமக்கு 5000 ரூபா மட்டுமே திருப்பிக் கிடைத்துள்ளது,, இந் நிலையில் புதிய புதிய திட்டங்களுக்கு நிதி உதவி செய்யுமாறு கோரும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளமுடியாமல் உள்ளது'' என்றார்.

---

## ''கிருஷ்ணபகவானை வழிபட்டு துயரத்தைப் போக்க வேண்டும்''

(கிளிநொச்சி)

''கிருஷ்ண பரமாத்மா துன்பங்களைத் துடைப்பவர். இன்று துன்பமும் துயரமும் சூழ்ந்துள்ளதால் நாம் அனைவரும் கிருஷ்ணபகவானை வழிபட்டு துயரத்தைப்போக்கி இன்பத்தைக் காணவேண்டும். பக்திநிறைந்த இந்தச் சூழலிலே எல்லா அன்பர்களும் கிருஷ்ணருக்குகந்த தொண்டு ஒன்றில் ஈடுபட்டிருக்கும் போது இந்தவிழா நடைபெறுகிறது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் கிளிநொச்சிக் கிருஷ்ணர் ஆலயத்தில் நடைபெற்ற அன்னதான விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு சபைத் தலைவர் திரு. நா சோதிநாதன் தலைமை தாங்கினர். அவர் தமது தலைமையுரையில்:— ''இன்று நம்மைச் சூழ்ந்த இன்னல்கள் யாவும் உண்மையான பக்தியினால் மட்டும் போக்கடிக்கக் கூடியது. நாம் எல்லாரும் இதய பூர்வமாக இவ் அன்னதான விழாவைச் சிறப்பிக்க வேண்டும்'' என்று கூறினர்.

இவ்விழாவில் திரு. ஆ.பஞ்சலிங்கம், செல்வி இ. வல்லிபுரம் ஆகியோரும் உரையாற்றினர்கள். பகல் முழுவதும் பஜனை நடைபெற்றதுடன் அன்னதானமும் வழங்கப்பட்டது.

---

### வண்ணை உற்சவம்

## பெரும்திரளான பக்தர்கள்

(வண்ணார்பண்ணை)

யாழ்-வண்ணை, ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய புரட்டாதிச் சனிக்கிழமை உற்சவம் 22 ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது

பல நூற்றுக் கணக்கான பக்தர்கள் இவ் உற்சவத்தில் கலந்து கொண்டனர். சனீஸ்வரனுக்கு எள் எண்ணை எரித்துத் தீபம் ஏற்றுவதில் பெருந்திரளான மக்கள் பங்குபற்றினர்.

உற்சவத்தில் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையைச் சேர்ந்த தொண்டர்கள் முழு நேர சேவையில்ஈடுபட்டிருந்தனர்.

---

### வல்லிபுர ஆழ்வார்

## ஆலய உற்சவம்

[பண்டத்தரிப்பு]

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்தமாதம் 8 ம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் சமுத்திர தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

அங்கு திரளும் பெரும் தொகையான பக்தர்களின் நலனை முன்னிட்டு செ்ன். ஜோன்ஸ்அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் அடுத்தமாதம் 7 ம் திகதி தொடக்கம் 10 ம் திகதி வரை இயங்கும்.

---

### பிறப்புச் சான்றிதழ்கள்

## வவுனியாவிற்கு கொண்டு செல்லப்பட மாட்டாது

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்டபிறப்புஇறப்புப் பதிவாளர் அலுவலக படப்பிடிப்புக் கருவிகள் பிரதிபண்ணும் கடதாசிகள் கொள்ளையடிக்கப் பட்டதால் பல ஆயிரக்கணக்கான பிறப்புப்பத்திர விண்ணப்ப தாரர்கள் பாதிப்புக் குள்ளாகியுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிகப்பதிவாளர் திரு.எஸ். இராசையா தெரிவித்தார். அடையாளஅட்டை கடவுச் சீட்டு பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து திரும்பிச்சென்றுள்ளனர்.

இப்படிப் பாதிப்புக்குள்ளானவர்களின் நலன்கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பதிவுப் புத்தகங்கள் சேதமடைந்துள்ளதால் பிறப்புப்பத்திரம் பெறவேண்டிய பலவிண்ணப்பங்கள் வழங்கு

[5-ம் பக்கம் பார்க்க]

---

### சக்தியே! துயர்தீரச் சக்தி தா!

சக்தியே! அதர்மமெலாம் ஒழித்து வெல்லுந்
துர்க்கையே! போற்றித் துதிக்கின்றோம் துயர்தீரச்
சக்திதா! என்றே விரதமதைக் காக்கின்றோமுயர்
சத்தியமே நிலைத்திடவே எப்பொழுதுந் துணையாவாய்!

—சங்குவேலி ப. மகேந்திரதாசன்

# மதுவரி அத்தியட்சகரின் துப்பாக்கி கொள்ளை

[புலோலி]

பருத்தித்துறை மதுவரி அத்திட்சகரின் கார் ஒன்று ஐந்து இளைஞர்களினால் கடத்தப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை மதுவரி அத்தியகட்சகர் திரு எம். மகேஸ்வரன் சாவகச்சேரி நீதிமன்றத்திற்குச் சென்று திரும்பிக் கொண்டிருக்கையில் நாவற்குளியில் வைத்து ஐந்து இளைஞர்கள் காரை மறித்து அவரைப்பயமுறுத்தி காரைக் கொண்டு அவரை இறக்கிவிட்டுச் சென்றனர். இது சம்பந்தமாக திரு மகேஸ்வரன் பொலிசில் புகார்செய்தார்.

பிற்பகல் கடத்தப்பட்ட கார் கச்சேரி-நல்லூர் வீதியில் உள்ள ஒழுங்கை ஒன்றில் அனாதரவாக நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சில நாட்களுக்கு முன்னர் இரவு வேளையில் இவரது வீட்டிற்கு வந்த இளைஞர் கோஷ்டி ஒன்று பயமுறுத்தி இவர் அலுவலக பாவனைக்கு வைத்திருந்த துப்பாக்கியையும் கொள்ளையடித்துச் சென்றதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் மொழி தினப்போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் கல்விவட்டார தமிழ்மொழித்தினம் சம்பந்தமான போட்டிகள் இன்றும் நாளையும் யாழ். சுன்னாகம் இராமநாதன் கல்லூரி புதிய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

மானிப்பாய் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. ச. தனஞ்செயன் தலைமையில் இப்போட்டிகள் நடைபெற விருக்கின்றன. இப்போட்டிகளில் சொல்வதெழுதல்கட்டுரைஎழுதல், வாசிப்பு பேச்சு ஆகிய போட்டிகள் நடைபெற விருக்கின்றன.

## வீடுகளைவிட்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன் தினமிரவு நடந்த இச்சம்பவத்தினால் மக்கள் மத்தியில் பதற்ற நிலை காணப்பட்டது.

## சிறைமீட்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

சிறைச்சாலை வாசல் கதவுள்ள சுவரொட்டியில் ''எமது விடுதலை வரலாறாகும். வரலாறு எமது மக்களை விடுதலை செய்யும்'' என்று எழுதப்பட்டு, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## உபவேந்தர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடத்திச் செல்லப்பட்ட இக்காரின் சாரதி கந்தசாமி பத்மநாதன் இதுபற்றி காங்கேசன்துறை பொலிஸில் புகார் செய்துள்ளார்.

### பின்வந்த செய்தி

கடத்திச் செல்லப்பட்ட இந்தக் கார் தெல்லிப்பளையிலுள்ள பேராசிரியர் வித்தியானந்தனின் இல்லத்திற்கு முன்னால் கைவிடப்பட்ட நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டது. (வெ)

## யாழ்., பளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் மட்டும்தான் இந்த வானொலித்தொலை பேசிக்கருவி இருப்பதாகவும், புகையிரதப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

### பளையிலும் கொள்ளை

(பச்சிலைப்பள்ளி)

நேற்றிக்காலை 7-30 மணியளவில் பளைப் புகையிரத நிலையத்திற்கு வானில் வந்துபுகுந்த துப்பாக்கி இளைஞர்கள் ஆறுபேர் அங்குள்ள வானொலித் தொலைபேசியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

புகையிரத நிலைய அதிபரை ஒரு இடத்தில் அசையாமல் நிற்கும்படி பணித்துவிட்டு வானொலித் தொலைபேசியை அபகரித்ததுடன் அங்குள்ள அனுராதபுரம் புகையிரத மத்திய கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொலைபேசித் தொடர்பினையும், மற்றுமொரு தொலைபேசித் தொடர்பினையும் துண்டித்துவிட்டுச் சென்றுள்ளனர்.

புகையிரத நிலையக் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

## பாலஸ்தீன...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கம் இலங்கைக்கு உதவ முன்வந்தது.

### லெபனானில் கைது

''தெற்கு லெபனானிலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கப் பயிற்சி முகாம்களில் தமிழ்த் தீவிரவாதிகள் பலர் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர். 1982ம் ஆண்டு இம்முகாம்களிலுள்ள பகுதிகளை இஸ்ரேலிய இராணுவம் ஊடுருவியபோது அவர்களில் பலர் இஸ்ரேலிய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டனர்.

''இவ்வேளையிலேயே இலங்கை அரசாங்கமும் இஸ்ரேலிடம் இராணுவ ஆலோசனை கோரியது இஸ்ரேல் அதற்கு உதவிவழங்கச் சம்மதித்தது.

''இஸ்ரேலிய எல்லைப்புறத்தில் தமிழ்க் கெரில்லாக்கள் பாலஸ்தீனியர்களால் பயிற்சியளிக்கப்பட்டதாலேயே இலங்கைக்கு இஸ்ரேலிய உதவி கிடைப்பது சாத்தியமாயிற்று.'

### 'ஷின்பெத்'

''கொழும்பில் சுமார் ஆறு இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்கள் இருக்கின்றனர். இவர்கள்இஸ்ரேலிய'மொசாட்'பாதுகாப்புச்சேவையின் 'ஷின்பெத்' என்ற சகோதர பிரிவைச் சேர்ந்தவர்கள் கொழும்புக்கு அருகிலுள்ள இராணுவத்தளமொன்றிலயே இவர்கள் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சியளிக்கின்றனர்.

''தாக்குதல்கள் இடம்பெறும் இடங்களில் கடுமையாக நடந்துகொள்வது இஸ்ரேலியர்களின் வழக்கமாகும். யாழ்ப்பாணத்தில் பல கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் சிலர் இஸ்ரேலியர்களையே குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதே நேரத்தில் இஸ்ரேலிய-இலங்கை உதவி ஒப்பந்தத்தை அமெரிக்க ஜனாதிபதி திரு. றேகனின் நடமாடும் தூதுவர் ஜெனரல் வோல்ட்டேர்ஸே தயாரித்ததாகவும் தெரிவித்துள்ளது.

''இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சியளிப்பதில் இஸ்ரேலியர்கள்பலத்த சிரமத்தை எதிர்நோக்கும் அதேநேரத்தில் இஸ்ரேலியப் பயிற்சியினால் அந்த இராணுவம் நன்கு சீரடைகிறது'' என்று 'எக்கானமிஸ்ட்' சஞ்சிகை கூறுகிறது. (கி)

## ரூபவாஹினி

### இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

24 ம் திகதி திங்கட்கிழமை
மாலை
6-35 'ஊரும் உலகும்' சஞ்சிகை நிழ்கச்சி (தமிழ்)
7-15 கலை அரங்கம் கர்நாடக இசைக் கச்சேரி
25 ம் திகதி செவ்வாய் கிழமை
மாலை
6-30 'நங்கூரம்' உள்ளூர்த் தமிழ்த் திரைப்படம் பாகம்-1
26 ம் திகதி புதன்கிழமை
மாலை
5-30 நாட்டுவளம் இசுறுமுனிய (தமிழ்)
6-00 'மலரும் அரும்புகள்' சிறுவர் நிகழ்ச்சி (தமிழ்)
28 ம் திகதி வெள்ளிக்கிழமை
மாலை
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)

### இன்று

மாலை
5-30 நாட்டுவளம் (சிங்களம்)
5-35 'வூடி வூட் பெக்கர் அன்ட் சன்ஸ்' கார்ட்டூர்ன் (ஆங்கிலம்)
6-00 பௌதிகம் (ஆங்கிலம்)
6-20 சிறுவர்களுக்கான இயற்கையும் விஞ்ஞானமும் (ஆங்கிலம்)
6-35 ஊரும் உலகும், சஞ்சிகை நிகழ்ச்சி (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 கலை அரங்தம் (தமிழ்]
7-45 ரேக்கா நாடகம் (சிங்களம்)
8-15 செய்திகள் (கிங்களம்)
8-35 பாடல்கள் (சிங்களம்
8-55 யெஸ்மினிஸ்ட்டர் நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 பொம்பா த ஜங்கிள் போய் (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 பொம்பா தொடர்ச்சி
11-15 நிகழ்ச்சிகள் முடிவு

## சில்லாலை—தும்பளப்பாய் வீதி புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தம்!- அரச அதிபருக்கு ஆட்சேபம்

(பண்டத்தரிப்பு)

மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட சில்லாலை தும்பளப்பாய் வீதி புனரமைப்புவேலைகள் இடைநடுவில் திடீரென நிறுத்தத்பட்டது. குறித்து சில்லாலை மாதர் கிராமஅபிவிருத்திச்சங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் பலத்த ஆட்சேபமும் வேதனையும் தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக சீர்கெட்ட நிலையில்இருந்த இந்த வீதியை திருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மேற்படி சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது என்றும் இதன்பிரகாரம்மூன்று இலட்சம் ரூபாநிதி ஒதுக்கப்பட்டு திருத்தவேலைகள் துரிதகதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில் மேலிடத்திலிருந்து வந்த உத்தரவின் பிரகாரம் திடீரெனவேலைகள் யாவும் நிறுத்தப்பட்டதாகவும் இன்னும் சுமார் 10ஆயிரம் ரூபாமதிப்புள்ள வேலைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பதாகவும், இடைநடுவில் நிறுத்தப்பட்டிருப்பதால் இதுவரைபெரும் பணம் செலவு செய்து மேற்கொண்டிருந்த திருத்தவேலைகள் யாவும்பயனற்றுப்போய் விடும் என்றும் மேற்படி சங்கத் தலைவியும் முன்னாள்பண்டத்தரிப்பு கிராமோதய சபைத்தலைவியுமான திருமதி.பேளி அத்தனாசியார் இதுதொடர்பாக யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## உணவு போஷாக்கு வாரம்

(பச்சிலைப்பள்ளி)

உணவு போஷாக்கு வாரத்தை முன்னிட்டு வவனியா பாடசாலைகளுக்கிடையே பேச்சு, கட்டுரை கவிதை போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை வவனியா பிராந்திய கல்வி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

## ஆசிரியர் மறைவுக்கு அனுதாபம்

(சாவகச்சேரி)

மட்டுவில் மகாவித்தியாலயத்தில் கல்விகற்பித்த பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரான திரு. என். வல்லிபுரத்தின் அகாலமரணம் குறித்து வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

''காலஞ்சென்ற ஆசிரியர் சுமார் ஐந்து வருடங்களாக மட்டுவில் மகாவித்தியாலயத்தில் கல்விகற்பித்தவர் என்பதுடன் வித்தியாலய மாணவர்களின் ஆங்கிலக்கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை எடுத்தவர் என்பது குறிப்பிடக்கூடிய அம்சங்களில் ஒன்று'' என்று குறித்த ஆசிரியரின் மாணவர்கள் மிகுந்த துக்கத்துடன் கூறியுள்ளனர்.

## கொள்ளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி எட்டாம் வாய்க்கால் காந்தி நிலையத்தில் கரைச்சி தெற்கு ப நோ. கூ. சங்க விற்பனவு நிலையத்தில் அரிசி மூடைகள், சீனி மூடைகள் உட்பட பல விற்பனவுப் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## பரு. ஹாட்லி நூலக வாரம்

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகத்திற்கு நூல்கள் சேகரிப்பதத்காக அடுத்த வாரம் நூலகவாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதையொட்டி கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ என். எஸ் .சாமுவேல் கருத்துத் தெரிவிக்கையில் பாடசாலை மாணவர்களுக்கு பயன் தரும் நூல்கள் மட்டுமே இச் சேகரிப்பில் ஏற்றுக் கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

## வவனியாவிற்கு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வதில் தாமதம் ஏற்படலாம் என்றும் தெரியவந்துள்ளது. தற்பொழுது உள்ள விண்ணப்பங்களை விரைவாக எழுதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது இவ்வலுவலகத்தில் போதிய ஊழியர்கள் இன்மையால் சிரமமிருந்து வருவதாகவும் தெரியவருகிறது.

யாழ் பதிவாளர் அலுவலகத்திற்கு மீண்டும் இரண்டு போட்டஸ்ரப் யந்திரம் அனுப்பப்படுமா என்பது கேள்விக் குறியாகவே இருப்பதாகவே அதிகாரிகள் கருதுகின்றனர்.

பிறப்புப் பத்திரம் பெற வேண்டிய இளைஞர்களுக்கு உதவும்வகையில் வடக்கில் உள்ள பொதுநலன் விரும்பிகள் போட்டஸ்ரப்யந்திரத்தை வழங்கி உதவுவதற்கு விரும்பும் போதும் அந்தயந்திரங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது யார் என்ற கேள்வியால் அதுவும் தடைப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதற்கு உதவிசெய்து நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் பலர் யாழ்.பிரஜைகள் குழுவையும் சேவைஸ்தாபனங்களையும் கேட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பிறப்புப்பதிவேடுகளை வவனியாவுக்குக் கொண்டுசென்று அங்கு உள்ள யந்திரங்கள் மூலம் பிரதிகளைச் செய்ய அரசமட்டத்தில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்ட போதும் அங்கு கொண்டு செல்வதற்கும், திருப்பிக் கொண்டு வருவதற்கும் பாதுகாப்பு இன்மையால் அத்திட்டமும் கைவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## விலைமதிப்புள்ள...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தியுள்ளது'.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

'யாழ். கச்சேரியை தவிர்ந்த விலை பெறுமதியான முத்திரைகள் விற்கப்படும் இடம் தபாலகங்களாகும். இவ்விடங்களிலும் முத்திரை பெறுவதில் சிரமம் இருப்பதாக எனக்கு பலர் அறிவித்துள்ள போதிலும் பொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன். இதே நேரத்தில் அதிகாரமளிக்கப்பட்ட இடங்களில் அல்லாது ஏனையோரிடமிருந்து விலை கூடிய முத்திரையை தற்போது பெறுவதில் பொது மக்கள் மிகவும் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்'. (க)

## கொள்ளை

(மாவிட்டபுரம்)

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க பெற்றோல் நிலையத்தில் நேற்று முன்தினம்மாலை துப்பாக்கி முனையில் 675 ரூபா 75 சதம் கொள்ளையடிக்கப்பட்டது

காரில் வந்த நான்குபேர் இப்பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதுபற்றிப் பெற்றோல் நிலைய மனேஜர் பொலிசில் புகார் செய்துள்ளார். (வெ)

★ ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
காலம்: 4 மாதம்
சகலவிதமான றேடியோக்கள், ரெலிவிசன், வீடியோ - டெக் திருத்தப்படும் முறை செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
★ COMPUTER PROGRAMMING IN COBOL LANGUAGE
(வேறு ஏதாவது Computer மொழியில் பயிற்சிபெற்றவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்)
★ மோட்டார் றீவைண்டிங்
சகல மின்சார பொருட்களின் றீவைண்டிங் செய்யப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
★ எலக்ரிக்கல் வயரிங்
ஒரு மாத முழுநேர செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
★ DIPLOMA IN HOTAL MANAGEMENT
★ FRENCH, GERMAN LANGUAGE, SPOKEN ENGLISH
காலம்: 4 மாதம். கட்டணம் 200/-
பயிற்சிகள் ஆரம்பம்: 05-10-1984
JAFFNA TECHNICAL INSTITUTE
ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.

## கூட்டுறவுச் சங்கங்களில் தொடரும் கொள்ளைகள்!

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்திலும், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கத்திலும் இனந் தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு இக் கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது. இனந் தெரியாத 16 பேர் கொண்ட கோஷ்டியினர் வானொன்றில் வந்து ப. நோ. கூ. ச. அலுவலகத்துக்குள் புகுந்து இரு காவலாளிகளையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்திவிட்டு 3,115 ரூபா 18 சதமும், 70,484 ரூபா 71 சதம் கொண்ட காசோலையையும் ஒருலட்சத்து70ஆயிரம் பெறுமதியான உணவுமுத்திரையும் கொண்ட இரும்புப் பெட்டியைக் கொள்ளையடித்துச் சென்றதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொள்ளையடித்தவர்கள் ப. நோ.கூ. சங்க வளவுக்குள் இருந்த தளபாடங்களையும், தொலைபேசியையும் உடைத்து நொருக்கியதாகவும், பதிவுப் புத்தகங்களை எடுத்துசிதறிவிட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் பின்னர் சுமார் 50 யார் தூரத்திலிருந்த தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்திலும், காவலாளியைப் பயமுறுத்திவிட்டு அங்குள்ள இரும்புப் பெட்டியை இனந்தெரியாத நபர்கள் கொள்ளையடித்ததாகவும், அப் பெட்டிக்குள் சுமார் மூவாயிரம் ரூபாவும் 31 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளும் இருந்ததாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. [மா]

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—8(24-09-1684)
வாரம்—திங்கள்
திதி—சதுர்த்தசி பிற்பகல் 12-16வரை
நகூஷசத்திரம் —பூரம் பிற்பகல்2-25 வரை

மேடம்:- கை கொடுத்துதவுவதற்கு தந்தை முன் வருவார் காரிய சித்தியும் கிட்டும் நீண்ட நாள் பகைவர்கள் இன்று மீண்டும் நண்பர்களாவார்கள்.

இடபம்:- கடமைமாற்றுமிடத்தில் புதிய நண்பர்களை தேடிக்கொள்வீர்கள் பொறியலாளர்களுக்குப் பொன்னுனதினம் வேண்டிய ஒருவரிடமிருந்து வர வேற்கத்தக்க செய்தி கிடைக்கும்.

மிதுனம்:- செலவுக்குவேண்டிய பணம் கிடைக்கும் விருந்துபசாரங்களில் அதிக உற்சாகம் காட்டுவீர்கள் சிறப்பான தினம்.

கடகம்:- நத்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்து கொண்டிருக்கும் மனத்தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும் வேண்டாத தொடர்பால் தவறுன போக்குக்கும் இடமுண்டு.

சிங்கம்:- குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள் எதிலும் அவசர முடிவை தவிர்த்துக் கொள்ளவும் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவும் பிரயாணத்தை தவிர்த்தல் நன்று.

கன்னி:- பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவை அடையும் குடும்பத்தில் மகிழ்ச்சிநிலவும் பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித்தரும்.

துலாம்:- சிந்தனை தலைதூக்கும், சீறிவரும் கோபம்,உடன் பிறந்த சகோதரத்தின் உடல் நிலையும் கவலையைத்தரலாம்.

விருச்சிகம்:- தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவும் தாய் வழிப் பெருமையும் உண்டு வாகன நலனுடன் வாழ்வும் சுகம் காணும்.

தனுசு:-நீண்ட நாள் கொடுத்த கடன் மீண்டும் வந்துசேரலாம் பிறந்த இடத்தின் பெருமை நிலை நாட்டப்படும் புத்திரர்களாலும் புகழ்கிடைக்கும்.

மகரம்:- மனதில் அமைதி குன்றும் எதிரிகள் எக்காளமிடுவர் மறைந்த நினைவுகள் தலை தூக்கும் அமைதியே நன்று.

கும்பம்:- களஸ்திரவழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும் வரவிலும் திருப்திகரமான நிலை தென்படும்.

மீனம்:- முன்னேற்றத்தில் முட்டுக் கட்டை தோன்றும் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள் சிலர் கடன்படவும் நேரும் நண்பர்களாலும் நஷ்டத்திற்கிடமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## நெதர்லாந்தில் 130 தமிழ் இளைஞர்கள் வேலையின்றி அவதி

(சாவகச்சேரி)

கடந்தவருடம் ஜூலைமாதம் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இந் நாட்டைவிட்டு வெளியேறிய பலருள் சுமார் 130 தமிழ் இளைஞர்கள் நெதர்லாந்து தேசத்தின் தலைநகரான அம்ஸ்ரடாமில் எவ்விதவேலைவாய்ப்பும் இன்றித் தங்கியுள்ளனர் எனஅறியப்படுகிறது.

சுமார் ஒருவருடமாக இவர்கள் வேலை தேடுவதையே தொழிலாகக் கொண்டு வந்தபோதிலும் நெதர்லாந்தில், தொழில் தேடுவது மிகவும் சிரமமானகாரியம் என்பதை உணர்ந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் அரசியல் தஞ்சம் கோரியபோதிலும்கூட இவர்களது கஸ்ட நிலையினை உரியவர்கள் இன்னமும் கவனத்துக்குஎடுக்கவில்லை என்பது அறியக்கூடியதாகவுள்ளது.

இத்தமிழ் இளைஞர்களின் நலன்களைச் சிலசமூகசேவை ஸ்தாபனங்கள் கவனிப்பதாக நம்பப்படுகிறது.

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

காணித் திணைக்களத்தின் முழங்காவில் படித்த வாலிபர் குழாய்க் கிணற்றுத் திட்டத்தில் வெளிக்கள போதனாசிரியராகக் கடமையாற்றிய திரு. நாகமுத்து நமசிவாயம் குடியேற்ற உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.


முதற்தரமான எதுவும் நன்றே. ஆயினும் மேற்கு ஜேர்மனியின் தரமான படைப்புகளுள் முதற்தரமானது மிகமிக நன்று

கையியக்கம்:

| | | ரூபா |
|---|---|---|
| 14" | 2066 | 10,150/– |
| 16" | 3006 | 12,975/– |
| 20" | 5016 | 13,875/– |
| 22" | 6016 | 16,725/– |
| 27" | 8016 | 17,700/– |

தொலைக்கட்டுப்பாடு:

| | | |
|---|---|---|
| 14" | 2206 | 12,075/– |
| 20" | 5216 | 15,350/– |
| 20" | 1320 | 15,900/– |
| 22" | 6216 | 17,450/– |
| 27" | 8236 | 19,925/– |
| 27" | 8258 | 19,925/– |

ஸ்டீரியோ மாடல்:

| | | |
|---|---|---|
| 18" | 4296 | 18,900/– |
| 20" | 5296 | 19,975/– |
| 22" | 1440 | 21,900/– |
| 27" | 1540 | 24,875/– |
| 27" | 1550 | 26,490/– |
| 27" | 1560 | 26,490/– |
| 27" | 1590 | 29,925/– |



ஜேர்மனியின் தொழில்நுட்பத் திறன் அற்புதமானது. அபாரமானது. விசேடமாக, அதன் உன்னதமான புதுப் புனைவுகளுக்கு மேற்கு ஜேர்மனி பிரபல்யமானது.

ஏனைய டி.வி.க்கள் டெலிபன்கனின் சாயலைக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒருபோதும் அதற்கு ஈடாக மாட்டா. டெலிபன்கன் வர்ணம், உங்கள் இல்லத்தில் இயற்கை வனப்பின் சோபையைப் படரச் செய்கிறது. 'கண்ீர்' என்ற அதன் தொனி இனிமையானது. இதமானது.

டெலிபன்கன் தத்ரூபமானது. பக்குவமானது. ஜேர்மனியின் கலாரசனைக்கு ஓர் அதிசிறந்த சான்றுக விளங்குகிறது.

ஜேர்மனியின் தொழில்நுட்பச் சிறப்பின் சிகரமாகச் சுடர்விட்டு ஒளிர்வது டெலிபன்கன்.

தரச் சிறப்பின் வரிசையில் முன்னணியில் திகழ்வது டெலிபன்கன்.

2 வருட உத்தரவாதம். விற்பனையின் பின்னர் கைதேர்ந்த பராமரிப்புச் சேவை.

TELEFUNKEN

டெலிபன்கன்

இலங்கையில் விற்பனையாகும் மேற்கு ஜேர்மனியின் தயாரிப்புகளில் முதன்மையானது

காட்சியறை, 467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. தொலைபேசி: 548238, 23130, 34133.

யாழ்ப்பாணம் - மகாராஜா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டெட், கே கே.எஸ். வீதி.

கண்டி - மகாராஜா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டெட், 78, இராஜ வீதி.

முபாரக் ஸ்டோர்ஸ் - திருகோணமலை. நியு மொகிடீன் ஸ்டோர்ஸ் – காத்தான்குடி.

கென்டேபியா லிமிட்டேட் – யாழ்ப்பாணம், கிருஷ்ணுஸ் - தெல்லிப்பளை, சேகர் இலெக்ரோனிக் கொம்ப்பிலெக்ஸ் – நெலலியடி, டெலிகோனர் - சாவகச்சேரி கிளிநொச்சி, சி. எஸ். சுலைமான் - மன்னர் ராஜ் எம்போரியம் – வவுனியா, சி. பி. மொகமட் - அனுராதபுரம், துஷாராஸ் – அனுராதபுரம். நியு கண்டி ஸ்டோர்ஸ் - புத்தளம். நிகம்பு ரேடர்ஸ் – நீர்கொழும்பு. ஷம்பா ஸ்டோர்ஸ் - கண்டி. குணசேகர அன்ட்கோ, – மாத்தளை. பன்ஸி மகால் - நாவலப்பிட்டிய. பன்ஸி கவுஸ் – கம்பளை, M.P.C.S. பண்டாரவளை, V தங்கசாமி நாடார் - தலவாக்கலை, அம்பிகா யுவலர்ஸ் - அட்டன். வேல் - அழகன் ஸ்டோர்ஸ் திருகோணமலை நியு மொகிடீன் ஸ்டோர்ஸ் - காத்தான்குடி.

GARADS

## பயங்கர...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு உள்ளாகியிருப்பதாகவும் கூறப்பட்டது. சுமார் 50 அமெரிக்க இராணுவக் குடும்பங்கள் இப்பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்று கூறப்பட்டது.

தென்பசுபிக்,ஆஸ்திரேலியப் பகுதிகள் அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் அணுகுண்டுப் பரிசோதனைப் பகுதிகளாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (கி)


**வின்ஸர்** [யாழ்.]
தினசரி 10-30, 2-30 மட்டும்
பாக்யராஜா, சத்தியகலா, கராட்டிமணி
**விடியும்வரை காத்திரு**
[புதிய பிரதி- ஈஸ்ட்மன் கலர்]

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமலஹாசன்-சுஜாதா
**அவள் ஒரு தொடர் கதை**

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30,
எம். ஜி. ஆர்
ஜெயலலிதா
**ஒருதாய்மக்கள்**
— புதிய பிரதி —

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ஜெமினி-தேவிகா
**இதயத்தில் நீ**

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா-நம்பியார்
**அரசகட்டளை**
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி-கே.ஆர். விஜயா
முத்துராமன்
**நெஞ்சிருக்கும்வரை**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 — 6-45
Limited Engagement!
Every lovers should see this film!
Willie games......
Phoebe crates
PARADISE
(Color) strctly for adults)
கண்டிப்பாக 17 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
நாகேஷ்
மறைந்த டிங்கிரி
கனகரெட்ணம்-
எஸ். தர்மலிங்கம்
**ரத்தத்தின் ரத்தமே**
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
THE BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
சிவாஜி-சாரதா-
சுந்தரராஜன்
நடித்த
**ஞான ஒளி**
இந்தியாவிலிருந்து பிரத்தியேகமாக பெறப்பட்ட புதிய கொப்பி


## அமெரிக்காவின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா தொடர்ந்து லெபனன் அரசாங்கத்துக்கு அதன் ஒத்துழைப்பை வழங்கும்.

லெபனனில் அமெரிக்காவை முறியடிப்பதில் எவரும்வெற்றி காணவில்லை; வெற்றிகாணப் போவதுமில்லை என்றார்.''

இதேவேளை அமெரிக்காவின் மூன்று கடற்படைக்கப்பல்கள் நேற்றுமுன்தினம் லெபனன் நோக்கிப் புறப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை அண்மையில் செங்கடலில் கண்ணிவெடி அகற்றும் பணியில் இறங்கியிருந்தவை. இவற்றில் ஒன்று ஹெலிகாப்டர் தாங்கிக்கப்பல் என்றும் ஏனைய இரண்டும் போர்கப்பல்கள் என்றும் கூறப்பட்டது.

இக்கப்பல்கள் அவசியமேற்படும் பட்சத்தில் லெபனனில் செயலில் இறங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஆர்ஜன்டீனா...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டுமென அவர்கள் கோஷமெழுப்பினர்.

திரு. அல்போன்ஸே பதிலளிக்கையில், ''நீதிக்குழுதலிடம்தரப்படுமென்றும் சட்டத்தின்கீழ் குற்றவாளிகளாகக் காணப்படும் அனைவரும் தகுந்தவகையில் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள்'' என்றார்.

ஆர்ஜன்டீனாவில் இராணுவ ஆட்சியின்போது நடைபெற்ற அட்டூழியங்கள் இந்நாட்டின் வரலாற்றில் மிகமோசமானவையாகும்.

இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டவர்கள் புதைக்கப்பட்ட புதைகுழிகள் பலவும் தோண்டப்பட்டு ஆணைக்குழு விசாரணைக்காகத் தகவல்கள் சேகரிக்கப்பட்டிருந்தன இவ் விசாரணைகளில் ஆர்ஜன்டீனா மக்கள் பெரும் ஆர்வங்காட்டியதுடன், ஒத்துழைப்பும் வழங்கினர். (கி)

## சீன இந்திய...

3ம் பக்கத் தொடர்ச்சி)

1881ம் ஆண்டில் இவ்விரு நாடுகளுக்கும் இடையே ஆரம்பமான எல்லைத்தகராறு உட்பட பல்வேறு அரசியல் வேறுபாடு சம்பந்தமான பேச்சுக்கள் ஐந்தாவது சுற்றைத் தற்போது அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆறாவது சுற்றுப் பேச்சுக்கள் புதுடில்லியில் இடம்பெறும். அப் பேச்சுக்களிலேயே இந்திய-சீன எல்லைத்தகராறு குறித்து விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பீக்கிங்கில் முடிவடைந்துள்ள ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்களில் சீனு, இந்தியா ஆகியன தம்மிடையே கல்வி, கலாசார, விஞ்ஞான, தொழில்நுட்ப பரிமாற்றங்களை மேற்கொள்ள முடிவு செய்துள்ளன.

## கிளிநொச்சிக் கச்சேரி

கிளிநொச்சிக் காணிக்கிளை அலுவலகத்தில் நிர்வாக அலுவலகக் கட்டிடமும் பொது அலுவலகக் கட்டிடமும் கட்டுவதற்கான

### கேள்விகள்

கிளிநொச்சிக் காணிக்கிளை அலுவலகத்தில் நிர்வாக அலுவலகக் கட்டிடமும் பொது அலுவலகக் கட்டிடமும் கட்டுவதற்கான கேள்விகள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களால் 10-10-1984 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ரூபா 250,000/- ற்கோ அல்லது அதற்கு மேலான தொகைக்கோ அரசாங்கத்தில் பதியப்பட்டு ரூபா 250,000/- அல்லது அதற்கு மேலான பெறுமதியுள்ள இரண்டு வேலைகளையாவது திருப்திகரமாக முடித்தவர்கள் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

02. கேள்வி விண்ணப்பப் படிவங்கள் 08-10-1984 நண்பகல் 12மணிவரை இவ் அலுவலகத்தில் வழங்கப்படும். மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- ஐயும் மீளப் பெறமுடியாத ரூபா 100/- ஐயும் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் இவ்வேலைகள் சம்பந்தமான வரைபடங்களை இவ் அலுவலகத்தில் பரிசீலனை செய்யலாம்.

3. மேலதிக விபரங்களுக்கு அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

**என்.ஜயநாதன்**
மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி,
கிளிநொச்சி,
20-09-1984. 1907

## மாவட்ட அபிவிருத்திச் சபை

### கேள்வி அறிவித்தல் 1984

பின்வரும் மின் விஸ்தரிப்பு திட்டங்களுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விக்காரர்கள் அரசாங்கத்தால் பதியப்பட்டவர்களாகவும், மின்சாரம் சம்பந்தமான வேலைகளைச் செய்வதற்கு அரசாங்க அனுமதி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். கேள்விகள் 19-10-1984 ம் திகதி முற்பகல் 11-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

முல்லைத்தீவு பட்டினம்:

1. கள்ளப்பாடு வீதி மின் விஸ்தரிப்பு.

முள்ளியவளை உப அலுவலகம்:

1. தண்ணீரூற்று குமுளமுனை வீதி மின்சார விஸ்தரிப்பு
2. தண்ணீரூற்று நராவிப்பிட்டி ,, ,,
3. காட்டுவிநாயகர் வீதி ,, ,,

கேள்விப்பத்திரங்கள் மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து 17-10-84-ம் திகதி, முற்பகல் 12-00 மணிவரை பிணைப்பணம் ரூபா 5000/-மும், கேள்விப் பத்திரத்திற்கான ரூபா 25/-ம் செலுத்திய பட்சத்தில் பெற்றுக் கொள்ளலாம்

கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதற்கென மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகத்தில் வைக்கப் பெற்றுள்ள பெட்டியிலிடலாம். கேள்வி உறையின் இடது பக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயரைக் குறிப்பிடப்படல் வேண்டும்.

எமது 06-03-84-ம் திகதிய விளம்பரப்படி கேள்வி கேட்டவர்கள் திரும்பவும் கேள்வி கேட்கத் தேவையில்லை. மேலும் இது பற்றிய முழு விபரங்களை மாவட்டச் செயலாளரது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கா.க.ஞானச்சந்திரன்**
மாவட்ட செயலாளர்,
முல்லைத்தீவு.

மாவட்ட அபிவிருத்திச் சபை,
அபிவிருத்திச் செயலகம்,
முல்லைத்தீவு
19-9-1984 1919

## திருமண நன்றி நவிலல்

### யோகேந்திரன் - கலா

13-9-84ந் திகதி நடந்தேறிய எமது திருமண வைபவத்திலும், அதனைத் தொடர்ந்து 14-9-84ல் அராலி வடக்கிலும் 15-9-84ல் கிளிநொச்சியிலும் நடைபெற்ற வரவேற்புபசாரங்களிலும் நேரில் பங்குகொண்டும், வாழ்த்துக்கள் அனுப்பியும், பரிசில்கள் வழங்கியும் எம்மை மகிழ்வித்த உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவர்க்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு மன்னிக்கவும்.

அராலி வடக்கு, திருநகர்,
வட்டுக்கோட்டை. கிளிநொச்சி.
1905

## லொறிகள் தேவை

முருங்கனில் இருந்து காங்கேசன் துறைக்குக் களிமண் கொண்டுவருவதற்கு லொறிகள் தேவை.

தொடர்பு கொள்ளவும்:


**துரை** ஆர். ஜி. பில்டிங்ஸ்
66-68, ஸ்ரான்லி றேட்.
யாழ்ப்பாணம்.
(1916) தொலைபேசி: 23750.

## சிராத்ததினம்

### இராசரத்தினம் புவிராசன்

மலர்வு: 2-2-77

உதிர்வு: 25-8-84



எம்மையெல்லாம் ஆறாத துயரத்தில் ஆழ்த்திவிட்டு 25-9-84ல் அகால மரணமடைந்த எங்கள் அருமைச் செல்வன் இ. புவிராசனின் சிராத்த தினம் 24-9-84ல் நடைபெறவிருப்பதால் அன்று நடைபெறும் வைபவங்களில் பங்குகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இராசரத்தினம் குடும்பத்தினர்

உபதபால்நிலையம்,
கோப்பாய் வடக்கு. 1900

## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி அன்னலெட்சுமி குமாரசாமி

மலர்வு: 28-8-1911 உதிர்வு: 7-10-1983



23 ஆண்டுகளுக்கு முன்பு தந்தை மறைந்த பின்பு தந்தைக்குத் தந்தையாய் தாய்க்குத் தாயாய் இருந்து வழிகாட்டிய கலங்கரை விளக்கமே! வீர ஊர் வல்வெட்டித்துறையில் தாய்ப் பாலுடனும் சோற்றுடனும் தணியாத தமிழ்ப் பற்றையும் வீரத்தையும் சைவப்பற்றையும் ஊட்டிச் செம்மல்களை வளர்த்த வீரப்பெண்மணியே!இறைவனடி சேரும்வரை அரசியல் உட்பட எல்லாத் துறையிலும் தலைசிறந்த நிபுணராகத் திகழ்ந்த அறிவுப்பகலவனே! அலைகடல் வற்றினாலும் உங்கள் மீது எங்களுக்கு உள்ள ஆசை அன்பு வற்றாது.

25-9-84செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறையில் வழிபாடு நடைபெறும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப் பிள்ளைகள், உறவினர்கள்,
சிநேகிதிகள்.

32, விதானை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. 1918

## மட்டு. நூல்நிலையத்தில்
# பழமையை பிரதிபலிக்கும் பொருட்காட்சிச் சாலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொது நூல் நிலையத்தில் மட்டக்களப்பின் பழமையை பிரதிபலிக்கும் பொருட்களை உள்ளடக்கிய கண்காட்சிக் கூடமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை நூல்நிலைய குழுவின் அனுசரணையுடன் மாநகரசபை மேற்கொண்டு வருகிறது.

இக்கூடத்தில் ஏட்டுச் சுவடிகள், வைத்தியக் குறிப்புகள், ஆதிகால பாவனைப் பொருட்கள், நூல்கள், நிகழ்ச்சிகளை நினைவு படுத்தும் புகைப்படங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்படும்.

# பனந்தும்பு ஏற்றுமதி

(வண்ணார்பண்ணை)

இலங்கையிலிருந்து பனந்தும்பு ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்பட்டு வருகின்றன.

பனை அபிவிருத்திச்சபையின் உதவியுடனும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஆதரவுடனும் தனியார் கம்பனி ஊடாக இத்தும்பு ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்பட்ட பனம்தும்பு இம்மாத இறுதியில் ஏற்றுமதிக் கம்பனியிடம் கையளிக்கப்படவுள்ளனபனைத்தொழில் நிபுணர் திரு. கே. சம்பந்தம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. சு. வேலாயுபிள்ளை, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா ஆகியோர் இந்த ஏற்றுமதிக்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

# கொழும்புத்துறையில் தும்புத் தொழிற்சாலை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில் தும்பு உற்பத்தியைக் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டு வரும் பெண்களுக்கு ஊக்கமளிகும் முகமாகத் தும்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இத்தும்புத் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட மங்கையர் கழகத் தலைவி திருமதி சிவானந்தினி யோகேந்திரா துரைசுவாமி நாட்டி வைத்துள்ளார். கொழும்புத்துறை மாதர் சங்கத்தின் கோரிக்கையைத் தொடர்ந்தே யாழ். மாவட்ட மங்கையர் கழகம் இத்தும்புத் தொழிற்சாலை அமைக்க முடிவு செய்துள்ளது.

கொழும்புத்துறையில் பெண்கள் பாரம்பரியமாகத் தென்னம்மட்டையிலிருந்து தும்பு உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர். இப்பகுதி தெங்கு மூலவளம் மிகுந்துள்ளதுடன் தென்னம்மட்டைகளை நனையவைப்பதற்கு வசதியாகக் கடற்கரையையும் கொண்டுள்ளது. இங்கு இத்தும்புத் தொழிற்சாலையையும் அமைப்பதற்கான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுச் சாத்தியக்கூற்று அறிக்கை தயாரிக்கப்ப்பட்டிருந்தது இதனையடுத்தே கொழும்புத்துறையில் தென்னந்தும்பு கிராமிய மூலவதுச் கைத்தொழில் அபிவிருத்திக்கான தும்புத்தொழில் உருவாக்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.


## மரண அறிவித்தல்
### C. விசாரட்ணம்

C. விசாரட்ணம் (இளைப்பாறிய P.W.D. Officer) காலமானர். இவர் செல்வத்தின் அன்புக்கணவரும், ரூபாவதி, பரிமளம் (London), நாகேந்திரம், இராசேந்திரம் (London) ஆகியோரின் அன்புத்தகப்பனுரும், தருமரத்தினம் (Retired Jailor), சந்திரசேகரம் Engineer London), சாந்தி (London) ஆகியோரின் அன்புமாமனுரும், பிரேமிலா, சர்மிலா, ரேணுகா, அனுர்கலி ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னரின் ஈமக்கிரியை 24-9-84 திங்கட்கிழமை காலை 0 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

133, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

1924



## மரண அறிவித்தல்
### ஜுலியட் சர்வானந்தா
சுன்னுகம்

இவர் முன்னுள் யாழ். சுகாதார அதிகாரி இராமலிங்கம் சர்வானந்தாவின் அன்பு மனைவியும், லெவ்டினன் கொமொடோர் கிறிஸ்டி பிரஊானந்தா(ஓமான்), Dr. பத்மானந்தா (U. K), நிமலானந்தா (U. K) ஆகியோரின் அன்புத்தாயாரும், மேர்சியா, Dr. ராஜஸ்வரி. சுனீத்தா, ஆகியோரின் மாமியாரும், சுகுணசுந்தரா (சிங்கப்பூர்) வின் மைத்துனியும், ரேஸ்ஸின் (U. K அன்புச்சகோதரியுமாவார் அன்னரின் இறுதிச் சடங்குகள் இன்று தங்கள் (24-9-84) பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று 4 மணியளவில் தெல்லிப்பளையிலுள்ள தென்னிந்திய திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

முதலியார் வளவு
சுன்னுகம்.

தகவல்: இ. சர்வானந்தா

1923


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலகக அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.

# இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கலாவதி மரண விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இன்று காலை நடைபெறவிருக்கிறது காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் இன்று சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

★

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் எரிந்த இடிபாடுகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட எலும்புத் துண்டுகள் தொடர்பான விசாரணை இன்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நடைபெறவிருக்கின்றது. (க)

# மின்உபகரணங்கள் கொள்ளை

(கிளிநொச்சி)

பூநகரியில் கட்டிடத் திணைக்களத்தினுல் கட்டப்படும் புதிய பொலிஸ் நிலையப் பகுதியில் இனந்தெரியாத சில இளைஞர்களினுல் 10 ஆயிரம் ரூபாபெறுமதியான மின்சார உபகரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது

முகமூடியுடன் வந்தஇவர்கள் அங்கிருந்த இரண்டு காவலாளிகளைக் கட்டிவைத்துவிட்டு 3 மின் விசிறிகள் உட்பட 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

# இரு ஊழியர் இடைநிறுத்தம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தினைதொடர்ந்து சங்கக்காரியாலயத்தில் கடமையற்றிய இரு ஊழியர்கள் தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்சள் மீதான விசாரணை விரைவில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையார் தெரிவித்துள்ளா.

# கார் கடத்தப்பட்டது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட்டுக்குச் சொந்தமான 'லான்சா' கார் ஒன்று துப்பாக்கி இளைஞர்களினுல் நேற்றுமுன்தினம் காலை கடத்தப்பட்டது.

றக்கா ரேட்டிலுள்ள உயர் அதிகாரியொருவரைச் சுற்றி வருவதற்காகச் சென்ற கார், அவரது வீட்டின் முன்னுல் நிறுத்தப்பட்டிருந்தபோது இச் சம்பவம் இடம்பெற்றது

'பாக்' ஒன்றைக் காரின் மேல் வைத்துவிட்டு, சாரதியிடம் திறப்பை கேட்டபோது அவர் ஓ வே பாக்கிலிருந்த யந்திரத் துப்பாக்கியை எடுத்துப் பயமுறுத்திச் சாவியைப் பறித்ததாகவும் விசாரணையில் தெரியவருகிறது.

# நல்லூர் விறகுகாலையில் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசாங்க விறகு காலையில் பொதுமக்களுக்கு நிறை குறைவான விறகுகள் விற்பனை செய்யப்படுவதாக சுமார்50 பேர்கையெழுத்திட்டு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது

அங்கு கடமையாற்றும் தொழிலாளர் மேலதிகமாக ஒரு ரூபா வசூலிப்பதா வும், அதற்குப் பற்றுச்சீட்டு வழங்குவதில்லையென்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது

விறகுகாலை முகாமையாளருக்கும் இதுபற்றி பலதடவை புகார் செய்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (க)

# இப்படியும் நடக்கிறது

சவூதி அரேபியாவில் உள்ள டமாம், அல்கோபர் நகர வீதி சுத்திகரிப்பு வேலைக்கென மேலும் 144 பேர் இலங்கையிலிருந்து வந்துள்ளார்கள்.

டமாம் 'ரி. வி' நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பரந்த வெளியில் அமைக்கப்பட்டுள்ள கம்பனி ஒன்றிற்கு வந்துள்ள இவர்கள்; இடநெருக்கடி காரணமாக கட்டிடத் தாழ்வாரங்களிலும், மணல் வெளியில் அமைக்கப்பட்ட தற்காலிக கூடாரங்களில் மின்சார வசதி இன்றியும், தார்ராற்றத்தை அள்ளிவீசும் அனல் காற்றை தாங்கிக் கொண்டு இருக்கும் அவல நிலையில் இருக்கிறார்கள்! பலருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளதாக நமக்கு கிடைத்துள்ள செய்தியொன்று கூறுகிறது.

இக்கரைக்கு அக்கரைபச்சை. அக்கரைக்குச் சென்று பார்த்தால்......இக்கரை பச்சையாக இருப்பதுபோல் தெரியும்!

ஊடுருவி.

## யாழ். பொது நூலக அபிவிருத்தி
# பற்றி ஆராயப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலக அபிவிருத்தி பற்றி நேற்று முன்தினம், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சிலமுடிவுகள் எடுக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் நூல்நிலைய உறுப்பினர்களாக சேர்ந்த திரு. கு. நேசையா, வண. பிதா பிரான்சிஸ் யோசப், திரு. எஸ். தியாகராசா, திரு. கே, முருகரத்தினம் ஆகியோரும் நூல்நிலைய ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

நூல்நிலையத்தில் இருவாரங்களுக்குள் படிப்பு அறை ஒன்று அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

நூல்நிலையம் எரிந்து மீள்விக்கப்பட்ட பின் இக்கூட்டம் முதல் தடவையாக நடைபெற்றது.

நூல்நிலையத்திற்கு தேவையான நூல்கள் பற்றிய பட்டியல் ஒன்றை நூல் நிலைக உபகுழுவிற்கு சமாப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (க)

# வெள்ள நிவாரண உதவி

(கொழும்புத்துறை)

இவ்வருடம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ். சமூக சேவைப்பகுதியினர் நிவாரண உதவிகளை வழங்குவருகின்றனர்.

சகல உதவி அரச அதிபர் பிரிவுகளிலிருந்தும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு இந் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இந்நிவாரண உதவித்திட்டத்தின்கீழ் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நான்கு டின்மீனும், இரண்டு கிலோ பால்மாவும் வழங்கப்படும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெள்ள நிவாரண உதவி கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வீதிகளில் கற்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள், கடைகள் வீடுகள் கட்டுபவர்கள், வீதியோரத்திலும் வீதியின் நடுவிலும். கற்களையும், மணலையும் குவிப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன,

யாழ்ப்பாணத்தில் நாவலர் வீதி, ஸ்ரான்லி வீதிகளில் சில இடங்களில் நடுவீதியில் மணல் பறிக்கப்பட்டுள்ளதால், போக்குவரத்து பாதிப்பதோடு விபத்துகளும் ஏற்படுகின்றது.

# இளம்பெண் பலியானுர்

(புலோலி)

அதிகாலை வேளையில் தேநீர் வைப்பதற்கு குசினிக்கு சென்று அடுப்புப்பற்றிய இளம்பெண் ஒருவரின் உடலில் தீப்பற்றியதனுல் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டு மரணமானுர்.

இவரின் உடலில் பற்றிய தீயை அணைக்கமுயன்ற தாயாரும் தீக்காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிப்பட்டர்.

இப்பரிதாபசம்பவம்தும்பளை நிலாவளவு வீதியில் உள்ள வீடொன்றிலேயே நடைபெற்றது. பதினேழு வயது மங்கையான குமுதினி என்பவரே இவ்வாறு பரிதாபமானமுறையில் மரணமானவராவர்.


## மரண அறிவித்தல்
மட்டுவிலைச் சேர்ந்த
### டாக்டர் விசுவலிங்கம்

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த டாக்டர் விசுவலிங்கம் 22-9-84-ல் காலமானுர். இவர் (குருநாகல் R. M. P. Of S H S. Office மருத்துவ உத்தியோகத்தரும்) தேவிமலரின் அன்புக்கணவரும், லோகேஸ்வரன் (பெருந்தெருக்கள் திணைக்களம் மன்னுர்), வரதேஸ்வரன் (பிரான்ஸ்), கலா (பல் வைத்தியப் பகுதி கொழும்பு), சுபத்திரா, கௌரி, மஞ்சுளா, புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுதிரவேலு, கந்தசாமி (மந்தா வைத்தியசாலை அடம்பன்), குமாரசாமி, பொன்னுச்சாமி, செல்லம்மா, காலஞ்சென்ற பொன்னுக்குட்டி, அம்மாக்குட்டி, திரவியம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்

அன்னரின் பூதவுடல் மட்டுவில் இல்லத்திலிருந்து 25-9-84 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு மட்டுவில் குச்சப்பிட்டி மயானத்திற்கு இறுதிக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1925